**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 199/2025**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சபரிபாலன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பரமசிவம்** | **Calling** | : | **பெயிண்டர்** |
| **Village** | : | **தாடிக்கொம்பு** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **30** |
| | | | **Dated** | : | **12.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 7 (பட்டியல் சாட்சி 7), **திரு. சபரிபாலன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தினை பெயிண்ட் அடிக்கும் வேலைக்காக போயிருந்தபோது, ராமையாபட்டி பேருந்து நிறுத்தத்தில் வைத்து செய்தேன். 17.12.2021ம் தேதி போலீசார் விபத்து நடந்த இடத்தினை பார்வையிட்டு வரைபடம் தயாரித்தார்கள். அதில் என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டதால் நான் செய்து கொடுத்தேன். என்னுடன் செல்வபாண்டி என்பவரும்

கையொப்பம் செய்தார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

நான் திண்டுக்கல் மாவட்ட சிறையில் இருந்துதான் சாட்சி சொல்ல வந்து இருக்கிறேன் என்றால் சரிதான். என்மீது நிறைய குற்ற வழக்குகள் உள்ளன என்றால், இரண்டு வழக்குகள் உள்ளன. போலீஸ் வட்டாரத்தில் நான் ஒரு தெரிந்த நபர் என்று சொன்னால் சரியல்ல. என்னோடு கையொப்பம் செய்த செல்வபாண்டியும், தற்போது சிறையில் தான் உள்ளார் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டு இருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நான் மேற்படி கையொப்பத்தினை காவல்நிலையத்தில் வைத்துதான் செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு மேற்படி சம்பவம் பற்றியோ, போலீசார் பார்வை மகஜர், வரைபடம் தயாரித்தது பற்றியோ எதுவும் தெரியாது என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதன்பேரில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**Taken down by me/before me in open court on 12.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.12 17:18:48 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**